## BHARATHIYAR UNIVERSITY, COIMBATORE – 641046

UNDER GRADUATE DEGREE PROGRAMMES (CBCS SEMESTER PATTERN)
( For the students admitted during the academic year 2014 – 2015 and onwards)

### பாடத்திட்டம் - இரண்டாம் பருவம்

(செய்யுள் , உரைநடை, இலக்கிய வரலாறு, விண்ணப்பம் வரைதல்)

அலகு - 1 திருக்குறள் - ( மூன்று அதிகாரங்கள் )

அ. நட்பு

ஆ. நட்பாராய்தல்

இ. கூடா நட்பு

2. மூதுரை - ஔவையார் 1- 29 ( 29 பாடல்கள்)
3. பழமொழி நானூறு கல்வி 10 பாடல்கள்
கல்லாதார் 6 பாடல்கள் ( 2 அதிகாரங்கள் )

அலகு - 2

1. திரிகடுகம் - ( 11, 17, 21,27, 32, 49, 63, 82, 93, 95 ) 10 பாடல்கள்
2. நாலடியார் - குடிப்பிறப்பு , மேன்மக்கள். 2 அதிகாரங்கள்
3. நான்மணிக்கடிகை - 10 பாடல்கள்

அலகு -3 **உரைநடை**

1. சங்கநெறிகள் - முனைவர். வ.சுப.மாணிக்கம்.
2. தமிழர் பண்பாடு - ஒரு விளக்கம் - டாக்டர்.சோ.நா.கந்தசாமி.
3. விருந்தோம்பல் - நேற்று - இன்று- நாளை. சரளா. ராஜகோபாலன்.
4. போதைப்பொருள் - முனைவர். அமுதன்.

அலகு - 4

5. இன்றைய சூழலில் மகளிரின் பணி- மீனாட்சி.
6. புதிர் எதிர் காலம் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
7. நட்பு நலம் - வேதாத்திரி மகரிஷி
8. இணையத் தமிழ் வளர்ச்சி - முனைவர் ப.அர.நக்கீரன்.

அலகு- 5

இலக்கிய வரலாறு பாடத்திட்டத்தைத் தழுவியது

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
2. தமிழ் உரைநடையின் தோற்றமும் - வளர்ச்சியும்

**பயிற்சிக்குரியன**

விண்ணப்பங்கள் , மடல்கள், எழுதச்செய்தல்.

# இரண்டாம் பருவம் வினாத்தாள் அமைப்பு

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 75

பிரிவு - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 x 1 = 10

பிரிவு -ஆ

**இரண்டு பக்க அளவில் விடையளி** 5 x 5 = 25

செய்யுள் - 2 வினாக்கள்
உரைநடை - 2 வினாக்கள்
அலகு --5 - 1 வினா

பிரிவு - இ

**கட்டுரை வடிவில் விடை எழுதுக** 5 x 8 = 40

செய்யுள் - 2 வினாக்கள்
உரைநடை - 1 வினா
இலக்கிய வரலாறு ___ 1 வினா
பயிற்சிக்குரியன (மடல்கள் , விண்ணப்பங்கள்) 1 வினா

**குறிப்பு :** ஆ, இ பிரிவுகளுக்குரிய வினாக்கள் ‘இது’ அல்லது ‘அது’ என்ற வகையில் அமைதல் வேண்டும்.

அ பிரிவு வினாக்கள் ஐந்து அலகுகளிலிருந்தும் கேட்கப்படல் வேண்டும்.

# திருக்குறள்

## நட்பு

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு 1
நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு 2
நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு 3
நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு 4
புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் 5
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு 6
அறிவின் அவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு 7
உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு 8
நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை 9
இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்எனும் நட்பு 10

## நட்பாராய்தல்

நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு 1
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் 2
குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு 3
குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு 4
அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல் 5
கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் 6
ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் 7
உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு 8
கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும் 9
மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்

ஒருவுக ஒப்பிலார் நட்பு 10

**கூடாநட்பு**

சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு 1
இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும் 2
பலநல்ல கற்றக் கடைத்தும் மனம் நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது 3

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும் 4
மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினாற் தேறற்பாற் றன்று 5
நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும் 6
சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான் 7
தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து 8
மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று 9
பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகம்நட்பு ஒரீஇ விடல் 10

# மூதுரை —— ஔவையார்

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா- நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால் 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர் 2

இன்னா இளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னார் அளவில் இனியவும் - இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு 3

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும் 4

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா 5

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ - கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான் 6

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம் 7

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோ
டிணங்கி இருப்புதுவும் நன்று 8

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதும் தீதே அவரோ
டிணங்கி இருப்பதுவுந் தீது. 9

நெல்லுக் கிறைத்த நீர்வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாஙகே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யு மழை 10

பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல் 11

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரு மாகா(து) அதனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும் 12

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே

நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம் 13

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் -தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி 14

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மே லிட்ட கலம் 15

அடக்க முடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு 16

அற்ற குளத்தில் ஆறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு 17

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் - சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால் 18
ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன் 19

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு 20

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும் 21

எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம் - கருதிப்போய்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை 22

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம் 23

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம்சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் - முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம் 24

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர் 25

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு 26

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்தொழுகாப் பெண் 27

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால் - தந்தம்
தனஞ்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று 28

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம்போ தவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போ தவளோடு போம் 29

# பழமொழி நானூறு

## கல்வி

ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ - ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார் 1

சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றொன்று சிந்தித்து உழன்று ஒன்று அறியுமேல்
கற்றொறுந் தான் கல்லாத வாறு 2

விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்
துளக்கம்இன்று என்றனைத்தும் தூக்கி விளக்கு
மருள்படுவ தாயினும் மலைநாட என்னை
பொருள்கொடுத்துக் கொள்ளார் இருள் 3
ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில் 4

உணற்குஇனிய இன்னீர் பிறிது உழிஇல் என்னும்
கிணற்று அகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை
முற்றப் பகலும் முனியாது இனிதோதிக்
கற்றலின் கேட்டலே நன்று 5

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும் 6

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக கவர்க்கே புலனாம் - நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட்கு ஆகாதே
பாம்பறியும் பாம்பின் கால் 7

நல்லார் நலத்தை உணரின் அவரினும்
நல்லார் உணர்ப பிறருணரார் - நல்ல
மயிலாடு மாமலை வெற்ப மற்று என்றும்
அயிலாலே போழ்ப அயில் 8

கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட
நிறைகுடம் நீர்தளும்பல் இல் 9

விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை யில்லார்

கதிப்பவர் நூலினைக் கையிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு. 10

# பழமொழி நானூறு - கல்லாதார்

கற்றானும் கற்றார்வாய்க் கேட்டானும் இல்லாதார்
தெற்ற உணரார் பொருள்களை - எற்றேல்
அறிவில்லான் மெய்தலைப் பாடு பிறிதில்லை
நாவல்கீழ்ப் பெற்ற கனி 11

கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால் சோர்வு படுதலால் - நல்லாய்
வினாமுந் துறாத உரையில்லை இல்லை
கனாமுந் துறாத வினை 12

கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்
நல்லேம்யாம் என்றொருவன் நன்கு மதித்தலென்
சொல்லால் வணக்கி வெகுண்(டு) அடு கிற்பார்க்கும்
சொல்லாக்கால் சொல்லுவது இல் 13

கல்வியான் ஆய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவுந் தீயவாம் - எல்லாம்
இவர்வரை நாட தமரையில் லார்க்கு
நகரமும் காடுபோன் றாங்கு 14

கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத (து) இல்லை ஒருவற்கு - நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை- இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு 15

கற்(று) ஆற்று வாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொல்தாற்றுக் கொண்டு சுனைத்து எழுதல் - எற்றெனின்
தானும் நடவான் முடவன் பிடிப்(பு) ஊணி
யானையோடு ஆடல் உறவு 16

**பதினெண்கீழ்க்கணக்கு**

**திரிகடுகம்**

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 1

ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்
கிருதலையு மின்னாப் பிரிவு -முருவினை
யுள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியு மிம்மூன்றுங்
கள்வரி னஞ்சப் படும். 2

பற்றென்னும் பாசத் தளையும் பலவழியும்
பற்றறா தோடும் அவாத்தேருந் - தெற்றெனப்
பொய்த்துரை யென்னும் பகையிருளும் இம்மூன்றும்
வித்துற வீடும் பிறப்பு. 3

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானுங் - கல்விச்
செவிக்குற்றம் பார்த்திருப் பானும் இம்மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார். 4

கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும் - வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்பும்இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். 5

கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள். 6

நல்விருந் தோம்பலின் நட்டானாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன் 7

உப்பின் பெருங்குப்பை நீர்படியின் இல்லாகும்
நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்லாகும்
செப்பம் உடையார் மழையனையர் இம்மூன்றும்
செப்ப நெறிதூரா வாறு 8

நண்பில்லார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்
பெண்பாலைக் காப்பிகழும் பேதையும் - பண்பில்
இழுக்கான சொல்லாடு வானுமிம் மூவர்
ஒழுக்கம் கடைப்பிடியா தார் 9

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை. 10

# நாலடியார் - குடிப்பிறப்பு

உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையில் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று?. 1

சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது - வான்தோயும்
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு. 2

இருக்கை யெழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப லொழிதலோடு இன்ன -குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாகக் கொண்டார் கயவரோடு
ஒன்றா வுணரற்பாற்று அன்று. 3

நல்லவை செய்யின் இயல்பாகும் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும் - எல்லாம்
உணரும் குடிப்பிறப்பின் ஊதியம் என்னோ
புணரும் ஒருவர்க்கு எனின். 4

கல்லாமை அச்சம் கயவர் தொழில்அச்சம்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம் - எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை யச்சம் மரத்தார்இம்
மாணாக் குடிப்பிறந் தார். 5

இனநன்மை யின்சொலொன் றீதல்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாம் - கனமணி
முத்தோடு இமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள. 6

செய்கை யழிந்து சிதல்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரில உடைத்தாகும்
எவ்வம் உழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை. 7

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம் திங்கள்போல்
செல்லாமை செல்வன்நேர் நிற்பினும் ஒப்புரவிற்கு
ஒல்கார் குடிப்பிறந் தார். 8

செல்லா இடத்தும் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்தும் செய்யார் சிறியவர் - புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோல்
பொருமுரண் ஆற்றுதல் இன்று. 9

எற்றொன்னும் இல்லா இடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தன் சேர்ந்தார்க்கு அசைவிடத்து ஊற்றாவர்
அற்றக் கடைத்தும் அகல்யாறு அகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்.

# நாலடியார் - மேன்மக்கள்

அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமாசு உறின். 1

இசையும் எனினும் இசையாது எனினும்
வசைதீர எண்ணுவார் சான்றோர் - விசையின்
நரிமா வுளங்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல். 2

நரம்பெழுந்து நல்கூர்ந்தார் ஆயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றம்கொண்டு ஏறார் - உரங்கவறா
உள்ளமெனும் நாரினால் கட்டி யுளவரையால்
செய்வர் செயற்பா லவை. 3

செல்வுழிக் கண்ணொருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையில் தோன்றப் புரிந்துயாப்பர்
நல்வரை நாட சிலநாள் அடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி. 4

புல்லா எழுத்தின் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவன் உரைப்பவும் கண்ணோடி
நல்லார் வருந்தியும் கேட்பரே மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து. 5

கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயின் சிதைந்து. 6

கள்ளார்கள் ளுண்ணார்கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்- தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயின் பரிவது இலர். 7

பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து
ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய
புறங்கூற்றில் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறம்கூற வேண்டா அவற்கு. 8

பன்னாளும் சென்றக்கால் பண்பிலார் தம்முழை
என்னானும் வேண்டுப என்றிகழ்ப -என்னானும்
வேண்டினும் நன்றுமற் றென்று விழுமியோர்
காண்தொறும் செய்வர் சிறப்பு. 9

உடையார் இவரென்று ஒருதலையாப் பற்றிக்
கடையார் பின்சென்று வாழ்வர் - உடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட இடத்து. 10

# நான்மணிக்கடிகை

எள்ளற்க என்றும் எளியரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேலவா உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து . 1

பறைபட வாழா அசுணமா உள்ளங்
குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு . 2

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. 3

கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கும் உயர்மதம் - மெல்லென்று
அருளிற் பிறக்கும் அறநெறி எல்லாம்
பொருளிற் பிறந்து விடும். 4

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணியாம்
தான்செல் லுலகத் தறம். 5

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம் - கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல். 6

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும் - என்றும்
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி அடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை. 7

இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக - தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 8

மனைக்குப்பாழ் வாள்நுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு. 9

நகைநலம் நட்டார்கண் நந்துஞ் சிறந்த
அவைநலம் அன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர்நலம் பாகனால் பாடெய்தும் ஊர்நலம்
உள்ளானால் உள்ளம் படும். 10